Special Issue
உண்மையின் முகம்
கல்முனை NET e paper
kalmunainet.com
தமிழ் மொழியினருக்காக தகவல் தளம்
17.06.2024 (குரோதி வருடம் ஆனி 03) திங் கிழ




### அம்பாறை வட்டமடு மேய்ச்சல்தரையில்

# சட்டவிரோத விவசாய நடவடிக்கை:

## கால்நடைகளை கொல்லும் ஈனச் செயலும் தொடர்கிறது!

## பாற்பண்ணையாளர்களுக்கு நீதி கிடைக்குமா?

### ஆலையடி வேம்பு பால் பண்ணையாளர் சங்கம்

வளம்மிகு இலங்கைத் திருநாடு, விவசாயப் பயிர்ச் செய்கைகாகவும் நெற் செய்கைக்காகவும் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரையாக்கவும் பணப்பயிர்களான தேயிலை, இறப்பர்ச் செய்கைக் காவும் மற்றும் மீன்பிடி (நன்னீர், உவர்நீர்) இற்கான வளங்களும் இயற்கையாகவே அமையப் பெற்றுள்ள ஓர் பொன்னாடாகும். இது எமது நாட்டுக்கு கிடைத்த மிகப்பெரும் கொடை. இவ்வாறான இயற்கையான வளப் பயன்பாட்டுக்கு மாறாக இயற்கையை அழிப்பதுடன் எமது வளத்தை மாற்றீடாக பயன்படுத்துவதானது அவ்வளத்தின் பலனை மட்டுப் படுத்துவதுடன் காலப்போக்கில் அது அழிந்து போகும் நிலையே ஏற்படும்.

இலங்கை வரலாற்றில் ஒவ்வொரு வளங்களும் அதன் அமைவிடத்திற்கேற்ப வளத்தை பயன்படுத்தி நன்மைபெறும் வகையில் சட்ட ரீதியாக ஒவ்வொரு வகையான விவசாயங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. அவ்வாறான ஒரு இயற்கையாக கால்நடை விவசாயத்திற்கான இடமாக காலம் காலமாக அமையப்பெற்றதே அம்பாறை மாவட்டத்தில் உள்ள வட்டமடு மேய்ச்சல் தரை. குறித்த கால்நடை விவசாயத்திற்கான இடத்தினை சட்டத்திற்கும் இயற்கைக் கும் முரணாக அபகரிக்கும் முயற்சிகளும் தனியார் அத்துமீறல்களும் அத்துமீறிய விவசாய செய்கைக்கான ஆக்கிரமிப்புக் களும் தொடர்கதையாகவே உள்ளன.

இவற்றை பாதுகாக்கவும் கால்நடை விவசாயத்தை தொடரவும் ஆலையடிவேம்பு பால் பண்ணையாளர் சங்கம் தொடர்ந்து போராட வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் உள்ளமை வேதனையே.

முன்னாள் மாகாணசபை உறுப்பினர் சோ.புஸ்ப்பராஜா தனது ஆளுமை, சட்ட ரீதியான ஆவணப்படுத்தலால் குறிப்பிட்டளவு இந்த அத்துமீறலை தடுக்க முடிந்தாலும் சில தூர நோக்கற்ற இனவாத அரசியல் கும்பல்களின் துணையுடன் இந்த மேய்ச்சல் தரைகளை ஆக்கிரமிப்பு செய்யும் செயற்பாடும் கால்நடைகளை கொல்லும் ஈனச் செயல்களும் அவ்வப்போது தொடர்ந்துகொண்டுதான் உள்ளன.

வட்டமடு மேய்ச்சல்தரையில் பல்வேறு தடவைகள் சட்டத்துக்கு முரணாக விவசாயத்திற்கு பயன்படுத்த கபளீகரம் செய்யும் முயற்சிகள் தொடர்ந்தால் பால் பண்ணையாளர் சங்கத்தால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு வழக்கும் நிலுவையில் உள்ளது. இந்த சட்டத்துக்கு முரணான செயற்பாட்டுக்கு சில அரசியல்வாதிகளும் உடந்தையாக உள்ளனர்.

**அம்பாறை மாவட்டத்திலுள்ள வட்டமடு மேய்ச்சல் தரை தொடர்பான வரலாற்று பார்வை...**

அம்பாறை மாவட்டத்தில் கால்நடை விவசாயத்திற்குரிய இடமாக காலா காலாமாக காணப்படும் வட்டமடு மேய்ச்சல் தரையானது கால்நடைகளை பராமரிப்பதற்கும் அதன் இன விருத்தியை பெருக்குவதற்கும் ஈர வலய பிரதேசமாக தெரிவு செய்யப்பட்டு மேட்டு நிலப்பகுதியை பசு மாடுகளுக்கும் தாழ் நிலப்பகுதியை எருமை மாடுகளுக்கும் ஏற்ற வகையில் மூன்று குளங்களுக்கு மத்தியில் (சாகம குளம், இருபஸ் குளம், இவம்மியடி குளம்) 3850 ஏக்கர் நிலத்தை மேய்ச்சல் தரையாக எல்லை நிர்ணயம் செய்து அப்போதைய அரசாங்க அதிபர் டி.விஜயசிங்க அவர்களினால் எழுத்தானை பிறப்பித்து குறித்த பிரதேசத்திற்குள் காடுகளை வெட்டுவதற்கோ விவசாயம் செய்வதற்கோ தடை அறிவித்தல் விடுக்கப் பட்டதுடன் குறித்த நிபந்தனைகளை மீறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவும் எழுத்தாணை 1974.08.27 ஆம் திகதி பிறப்பிக்கப்பட்டிருந்தன.

அதன் பின்னர் கால்நடை பாற் பண்ணையாளர்களின் வேண்டுகோளையடுத்து அப்போது கால்நடை அமைச்சராகவிருந்த சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின் ஏற்பாட்டில் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட கால்நடைகளுக்குரிய C03 எனும் புல்லின வகைகளை கொண்டு வந்து வட்டமடு மேய்ச்சல் தரையில் நடப்பட்டமையும் வரலாற்று பதிவாகும்.

> “ வட்டமடு மேய்ச்சல்தரையை சட்டத்திற்கும் இயற்கைக்கும் முரணாக அபகரிக்கும் முயற்சிகளும் தனியார் அத்துமீறல்களும் அத்துமீறிய விவசாய செய்கைக்கான ஆக்கிரமிப்புக்களும் தொடர்கதையாகவே உள்ளன. ”

பால் உற்பத்தியின் தேவையை கருத்தில் கொண்டு அதன் முக்கியத்துவத்தின் காரணமாக உற்பத்தியை பெருக்குவதற்காக 4000 ஏக்கர் நிலத்தை நில அளவீட்டு திணைக்களத்தினால் 1972ஆம் ஆண்டில் இருந்து 1975 ஆம் ஆண்டு காலப்பகுதிவரை அளவீடு செய்யப்பட்டு அதற்கமைவாக எல்லைகள் வகுக்கப்பட்டதுடன் குறித் தொகுக்கப்பட்ட மேய்ச்சல்தரை பகுதியில் காடுகள் வெட்டுதல் விவசாயம் செய்பவர்களின் நடவடிக்கைகளை தடுக்கும்



வகையில் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவும் வர்த்தமானி பிரசுரம் செய்ய வேண்டும் எனும் நோக்குடன் 1976.06.17 நாட்டுக்கு நாட்டு மக்களுக்கு தெரியப்படுத்துவதற்காக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரின் வேண்டுகோளுக்கமைவாக அப்போதைய நாட்டின் ஜனாதிபதியான வில்லியம் கோபல்லாவ அவர்களினால் வர்த்தமானி வெளியிடப்பட்டிருந்தமையும் குறிப்பிடத் தக்கதாகும் (வர்த்தமானி இல 217/51).

இவ்வாறு சட்ட ரீதியானதும் நாட்டின் பால் உற்பத்தி வருமானத்தை கூட்டுவதற்குமாக பொருத்தமாக தெரிவு செய்யப்பட்டு சட்ட ரீதியாக கால்நடை மேய்ச்சல் தரையாக பயன்படுத்தப்பட்டு வரும் வட்டமடு மேய்ச்சல் தரை காணிகளில் பின் நாடகளில் அத்துமீறி விவசாயம் செய்யும் சட்டத்துக்கு முறணான செயற்பாடுகள் சம்பவங்கள் பதிவாகியுள்ளமையும் போலி விவசாய காணி அனுமதிப்பத்திரங்கள் தயாரிக்கப் படுவதும் அதற்கெதிராக பால் பண்ணையாளர்கள் போராடுவதும் தொடர்கின்றமையும் குறுகிய நோக்கோடு சில அரசியல்வாதிகள் குறித்த அத்துமீறலுக்கு துணைபோவதும் வேதனையான விடயமே.

சட்ட விரோத ஆக்கிரமிப்பாளர்களால் அவ்வப்போது கால்நடைகள் ஈவிரக்கமின்றி கொல்லப்படுவதும் தொடர்ந்து கொண்டுதான் உள்ளன.

ஆகவே, குறித்த ஆக்கிரமிப்புக்கு முற்றுப் புள்ளி வைக்கும் வகையில் பொறுப்பு வாய்ந்த அரச அதிகாரிகள் அமைச்சர்கள் கிழக்கு மாகாண ஆளுநர் அவர்கள் உரிய நடிவடிக்கை எடுத்து பால் உற்பத்திக்கும் கால்நடை வளப்பிற்கும் உரிய பாதுகாப்பையும் நீதியையும் பெற்றுத்தர வேண்டும் என ஆலையடிவேம்பு பால் பண்ணையாளர்கள் சங்கம் கோரிக்கை முன்வைக்கின்றனர்.



**மேய்ச்சல் தரையை கபளீகரம் செய்யும் செயல்களுக்கு சில குறுகிய நோக்கம் கொண்ட அரசியல்வாதிகளும் உடந்தையாக உள்ளனர்.**